டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 28.03.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 231 - Madurai | Online Edition

# கூடுதலாக 20% வணிக சிலிண்டர்கள் ஒதுக்கீடு! மத்திய அரசு தகவல்!!

புது தில்லி, மார்ச் 27

அனைத்து மாநிலங்களுக்கும் கூடுதலாக 20% வணிக சிலிண்டர்கள் ஒதுக்கீடு செய்யப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஈரான் போருக்கு முன்பிருந்த அளவில் 70% அளவுக்கு வணிக சிலிண்டர்கள் தற்போது விநியோகம் செய்யப் படுகிறது. தற்போது கூடுதலாக கிடைக்கும் சிலிண்டர்களை ஆட்டோமொபைல், டெக்ஸ்டைல் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு வழங்க அறிவுரை வழங்கியது.

மேலும் இதுகுறித்து பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகச் செயலாளர் நீரஜ் மிட்டல் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பல்வேறு துறைகளுக்கான வீட்டு உபயோகம் அல்லாத எல்.பி.ஜி ஒதுக்கீடு தொடர்பான முந்தைய கடிதங் களின் தொடர்ச்சியாக இந்தக் கடிதம் அனுப்பப்படுகிறது.

இதன் விளைவாக, மாநிலங்களுக்கு நெருக்கடிக்கு முந்தைய ஒதுக்கீட்டில் 40% வழங்கப்பட்டுள்ளது. மேலும், குழாய் வழி இயற்கை எரிவாயுவை (PNG) ஊக்குவிப்பதற்கான சில சீர்திருத்தங்களை மேற்கொண்டதன் அடிப்படையில் கூடுதலாக 10% ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

பல மாநிலங்கள் இந்தச் சீர்திருத்தங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ செயல்படுத்தி, அந்த 10% கூடுதல் ஒதுக்கீட்டைப் பெற்றுள்ளன என்பதைப் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தற்போதுள்ள 50% ஒதுக்கீட்டுடன் கூடுதலாக 20% ஒதுக்கீடு வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. இதன் மூலம், வீட்டு உபயோகம் அல்லாத எல்.பி.ஜி சிலிண்டர்களின் மொத்த ஒதுக்கீடு, நெருக்கடிக்கு முந்தைய அளவில் 70% ஆக உயரும்.

# மதுரை மாவட்டத்திற்கு தேவையான உரங்கள் இருப்பில் உள்ளது

## POS பில் பெற்று உரங்கள் வாங்கி பயன் பெற வேண்டுகோள்

மதுரை, மார்ச் 27

மதுரை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு கோடை பயிர்களுக்கு வழங்குவதற்கு தேவையான உரங்கள் இருப்பில் உள்ள தாகவும், விவசாயிகள் தேவைப்படும் உரங்களை ஆதார் எடுத்து சென்று POS பில் பெற்று உரங்கள் வாங்கி பயன் பெற மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கே.பி.முருகேசன் விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

உரம் விற்பனை செய்திடும் தனியார் விற்பனையாளர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர்கள், தங்களிடம் இருப்பில் உள்ள உரங்களை விவசாயிகள் கேட்கும் போது ஆதார் எண் பெற்று POS மூலம் மட்டும் பில் வழங்கி உரம் விநியோகம் செய்ய வேண்டும்.

தினசரி விலைப்பட்டியல் விவசாயிகள் பார்வைக்கு தெரியும்படி எழுதி வைக்க வேண்டும். புத்தக இருப்பு, உண்மை இருப்பு, POS இருப்பு சரியாக இருக்க வேண்டும். உரம் விநியோகத்தில் தவறுகள் கண்டறியப்பட்டால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார்.

(உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985 மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955ன் படி) நடவடிக்கைஎடுக்கப்படும் என எச்சரித்தார். மதுரை மாட்டுத்தாவணி பகுதியில் உள்ள உரக் கடைகளில் வேளாண்மை இணை இயக்குநர் கே.பி.முருகேசன் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) கோ.பரமேஸ்வரன் திடீர் ஆய்வு செய்தனர்.

மேலும் மதுரை மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாரங் களிலும் உரம் விநியோகம் தொடர்பாக திடீர் ஆய்வு வேளாண்மை உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நவரை பட்டத்தில் அறுவடை தீவிரம் நெல் உலர்த்தும் பணியில் விவசாயிகள்

ராணிப்பேட்டை, மார்ச் 27

ராணிப்பேட்டை மாவட்டத்தில் நவரை பட்டத்தில் அறுவடை பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதனால் விற்பனைக்கூடங்களில் நெல் மூட்டைகள் குவிகிறது. ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் நவரைப் பருவத்தில் விவசாயம் செய்த நெற்பயிர்கள் தற்போது அறுவடை செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் விவசாயிகள் அறுவடை செய்த நெல் மூட்டைகளை அரசின் ஒழுங்கு முறை விற்பனை கூடம், அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கொண்டு வந்து குவித்து விற்பனை செய்து வருகின்றனர். இதனால் நெல் வியாபாரிகளும் களத்தில் இறங்கி, விவசாயி களிடம் இருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் காவேரிப்பாக்கம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் நவரைப் பட்டத்தில் கோ-51, ஏடிடி-36, உள்ளிட்ட நெல் ரகங்கள் அறுவடை செய்து, காவேரிப்பாக்கம் அரசின் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்ய தொடங்கி உள்ளனர். இதில் அறுவடை செய்த நெல் மூட்டை களில் ஈரப்பதம் இருப்பதால், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் உள்ள நெல் களத்தில் விவசாயிகள் உலர்த்தும் பணியில் நேற்று ஈடுபட்டுள்ளனர். இதனால் நெல்லின் ஈரப்பதம் குறைந்தால், கூடுதல் விலைப் போகும் என்பது விவசாயிகள் நம்பிக்கையாக உள்ளது.

மேலும் காவேரிப்பாக்கம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நேற்று கோ-51,ரக நெல் குறைந்த பட்சமாக ரூ 1300-ம், அதிகபட்சமாக ரூ 1380-ம், கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இதேபோல் மகேந்திரா 606-ரக நெல் குறைந்த பட்சம் விலை ரூ1500-க்கும், அதிக பட்ச விலை ரூ 1557-க்கும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அரியலூர் மாவட்டத்திற்கு தேவையான உரங்கள் இருப்பில் உள்ளது

## வேளாண் துறை தகவல்



அரியலூர், மார்ச் 27

அரியலூர் மாவட்டத்தில் தற்போது யூரியா 2853 மெட்ரிக் டன், டிஏபி 1342 மெட்ரிக் டன், பொட்டாஷ் 746 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் உரம் 3194 மெட்ரிக் டன், சூப்பர் பாஸ்பேட் 631 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளது.

அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனியின் அறிவுரையின்படி வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன் அரியலூர் மாவட்டத்தில் உள்ள உரம் விற்பனை நிலையங்களை திடீர் ஆய்வு செய்தார். ஆய்வின் போது உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயியின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக்கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும்.

அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். தழைச்சத்துக்காக யூரியாவுக்கு பதிலாக நானோ யூரியா பயன்படுத்தலாம். வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.



# எறும்புகள் : உலகின் மிகச்சிறிய பொறியாளர்கள்



## அறிமுகம்

பூமியில் உள்ள மிகவும் கவர்ச்சிகரமான உயிரினங்களில் எறும்புகளும் ஒன்றாகும். அவற்றின் மிகச்சிறிய அளவு காரணமாக, அவை பெரும்பாலும் கவனிக்கப்படாமல் போகின்றன. ஆயினும், இந்தச் சிறிய பூச்சிகள் மனிதப் பொறியியல் மற்றும் சமூக ஒழுங்கமைப்பிற்கு நிகரான அசாதாரணத் திறன்களை வெளிப்படுத்துகின்றன. காடுகள் முதல் நகர்ப்புற வீடுகள் வரை கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் காணப்படும் எறும்புகள், மிகவும் கட்டமைக்கப்பட்ட கூட்டங்களில் வாழ்கின்றன மற்றும் சிக்கலான பணிகளை வியக்கத்தக்க செயல்திறனுடன் செய்கின்றன.

அவற்றின் குழுப்பணி, சிக்கல்களைத் தீர்க்கும் திறன் மற்றும் சிக்கலான கூடுகளைக் கட்டும் ஆற்றல் ஆகியவை, அவற்றுக்கு 'உலகின் மிகச்சிறிய பொறியாளர்கள்' என்ற பட்டத்தைப் பெற்றுத் தந்துள்ளன.

## குழுப்பணி மற்றும் ஒழுங்கமைப்பின் வல்லுநர்கள்

எறும்புகளின் மிகவும் வியக்கத்தக்க குணங்களில் ஒன்று, அவை ஒன்றிணைந்து செயல்படும் திறன் ஆகும். ஒரு கூட்டத்தில் உள்ள ஒவ்வொரு எறும்புக்கும் ஒரு குறிப்பிட்ட பங்கு உண்டு. வேலைக்கார எறும்புகள் உணவைச் சேகரிக்கின்றன, போர் எறும்புகள் கூட்டைப் பாதுகாக்கின்றன, மற்றும் ராணி எறும்பு இனப்பெருக்கத்தை உறுதி செய்கிறது. எந்தவொரு மையக் கட்டுப்பாடும் இல்லாமல், பெரோமோன்கள் எனப்படும் வேதியியல் சமிக்ஞைகளைப் பயன்படுத்தி எறும்புகள் தங்கள் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கின்றன.இந்த ஒத்துழைப்பு, தங்கள் உடல் எடையை விடப் பல மடங்கு அதிக எடையுள்ள பொருட்களைச் சுமப்பது மற்றும் தடைகளைக் கடக்க உயிருள்ள

பாலங்களை உருவாக்குவது போன்ற நம்பமுடியாத சாதனைகளை அடைய அவற்றுக்கு உதவுகிறது. அவற்றின் ஒழுங்கமைக்கப்பட்ட சமூக அமைப்பு, இயற்கையின் ஒற்றுமை மற்றும் செயல்திறனுக்கு ஒரு சரியான எடுத்துக்காட்டாகும்.

## நிலத்தடி நகரங்களின் திறமையான கட்டுமானர்கள்



எறும்புகள் திறமையான கட்டிடக் கலைஞர்கள். அவை சிக்கலான மற்றும் பயனுள்ள கூடுகளைக் கட்டுகின்றன. இந்த நிலத்தடிக் குடியிருப்புகள், உணவு சேமிப்பு, நாற்றங்கால்கள் மற்றும் ஓய்விடங்கள் போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக வடிவமைக்கப்பட்ட சுரங்கங்கள், அறைகள் மற்றும் சேமிப்புப் பகுதிகளைக் கொண்டுள்ளன. ஒரு எறும்புக் கூட்டின் அமைப்பு, முறையான காற்றோட்டத்தையும், வேட்டையாடிகள் மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகளிலிருந்து பாதுகாப்பையும் உறுதி செய்கிறது. சில இனங்கள் வானிலைக்கு ஏற்ப தங்கள் கூடுகளின் வடிவமைப்பை மாற்றியமைத்துக் கொள்கின்றன. இது அவற்றின் மேம்பட்ட தகவமைப்புத் திறனையும் பொறியியல் திறமையையும் காட்டுகிறது.

## விவசாயிகள் மற்றும் வள மேலாளர்கள்

ஆச்சரியப்படும் விதமாக, எறும்புகளும் ஒரு வகையான விவசாயத்தைச் செய்கின்றன. சில இனங்கள் அசுவினிப் பூச்சிகளைப் பாதுகாப்பதன் மூலமும், அவை உற்பத்தி செய்யும் இனிப்பான திரவத்தை உண்பதன் மூலமும் அவற்றை 'பண்ணை' செய்கின்றன. மற்றவை, உணவு ஆதாரமாகத் தங்கள் கூடுகளுக்குள் பூஞ்சைகளை வளர்க்கின்றன.




எறும்புகள் திறமையான வள மேலாளர்களாகவும் இருக்கின்றன. அவை உணவைச் சேமித்து, எதிர்காலத் தேவைகளுக்காகத் திட்டமிட்டு, கவனமான ஒழுங்கமைப்பின் மூலம் தங்கள் கூட்டத்தைப் பராமரிக்கின்றன. வளங்களை விவேகமாக நிர்வகிக்கும் இந்தத் திறன், முழு கூட்டத்தின் உயிர்வாழ்வையும் உறுதி செய்கிறது.

**முடிவுரை**

எறும்புகள் அளவில் மிகச் சிறியவையாக இருந்தாலும், அவை இயற்கையுலகில் நுண்ணறிவு, ஒத்துழைப்பு மற்றும் பொறியியல் ஆகியவற்றிற்கு வலிமையான எடுத்துக் காட்டுகளாகும்.

அவை ஒன்றிணைந்து செயல்படும் திறன், சிக்கலான கட்டமைப்புகளை உருவாக்கும் திறன் மற்றும் வளங்களைத் திறமையாக நிர்வகிக்கும் திறன் ஆகியவை மனிதர்கள் கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்களை எடுத்துக் காட்டுகின்றன.

எறும்புகளைக் கவனிப்பதன் மூலம், இயற்கையின் நுட்பமான மற்றும் பெரும்பாலும் மறைந் திருக்கும் அதிசயங்களைப் பற்றிய ஆழமான புரிதலை நாம் பெறுகிறோம்.

மிகச்சிறிய உயிரினங்கள் கூட மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது.

“எறும்புகள் – ஒற்றுமையின் உயிருள்ள உதாரணம்.”



கட்டுரை ஆசிரியர் : **ச.பூர்ணிமா, உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்), பயிர்பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் : poorny29@gmail.com.**



# அதிக விளைச்சல் பெற விதை பரிசோதனை செய்வீர்!

நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் நல்ல விளைச்சல் பெற்றிட விதைகளை விதைக்கும் முன் தங்களிடம் உள்ளது நல்ல தரமான விதைதானா என கண்டறிந்து பின்னர் விதைப்பதே மிகவும் சிறந்தது.

நல்ல முளைப்பு திறனும், தூய்மையும் கொண்ட விதைகளை விதைப்பதன் மூலம் நல்ல மகசூல் பெற இயலும். நல்ல முளைப்பு திறன் கொண்ட விதைகள் அதிக வீரியம் உடைய தாகவும், அதிகளவில் உற்பத்தி திறன் கொண்டதாகவும் இருப்பதால் வயலில் இடப்படும் உரங்கள் மற்றும் பாய்ச்சப்படும் நீர் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு அதிக விளைச்சலை பெற முடியும்.

எனவே விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் அனைவரும் தங்களிடம் இருக்கும் விதைகளை தரமானது தானா என பரிசோதனை செய்து பயன்படுத்திட வேண்டும். மேலும் விதை பரிசோதனை செய்ய விதை மாதிரியுடன் விதை பரிசோதனைக்கான கட்டணம் ரூபாய் 80/- செலுத்த வேண்டும்.

**விதை மாதிரி அனுப்ப வேண்டிய முகவரி :** மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், 15,காளியம்மன் கோவில் தெரு, நாகப்பட்டினம் –611001.

விதை மாதிரியுடன் விதை மாதிரியின் பயிர், இரகம், குவியல் எண் மற்றும் தேவைப்படும் பரிசோதனை ஆகியவற்றுடன் அனுப்புநர் பெயர், முகவரி மற்றும் தொடர்பு எண்ணுடன் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ விதை மாதிரியுடன் கொடுத்து பயன் பெறுமாறு நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை அலுவலர் து.சிவவீரபாண்டியன் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் அ.அமுதாதேவி, செ.பிரசன்னா தெரிவித்துள்ளனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# சுட்டெரிக்கும் வெயிலால்

# இளநீர், குளிர்பானங்கள் விற்பனை அதிகரிப்பு!



கன்னியாகுமரி, மார்ச் 27

கன்னியாகுமரி மாவட்டத்தில் இரு பருவமழை பெய்வதுடன், கோடைக்காலத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வருகிறது. கடந்த சில நாட்களாக பகல் வேளையில் வீட்டைவிட்டு வெளியே செல்ல முடியாத அளவிற்கு கடும் வெயில் கூட்டெரிக்கிறது. கடும் வெயிலால், இளநீர், குளிர்பானங்கள் விற்பனை சூடுபிடித்து உள்ளது. திண்டிவனத்தில் இருந்து தர்பூசணி பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. ஒரு கிலோ தர்பூசணி பழம் ரூ.18க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வீட்டில் இருந்து வெளியே வருபவர்கள் வெப்பத்தை தணிக்கும் வகையில் குளிர்பானங்களை வாங்கி பருகுகின்றனர். இந்த வெப்பத்தை தொடர்ந்து கரும்பு உள்ளிட்ட ஜூஸ்கள், குளிர் பானங்கள் விற்பனை அதிகரித்துள்ளது. இதுபோல் இளநீர் விற்பனையும் அதிகரித்துள்ளது.

நெல்லை மாவட்டம் பணக்குடி, களக்காடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சிவப்பு இளநீர் கொண்டு வரப்படுகிறது. அங்கிருந்து குமரிக்கு வரும் சிவப்பு இளநீர் ஒன்று ரூ.60க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதிக இளநீர் வரும் பட்சத்தில் விலையும் குறையும் என வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.




Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நிலக்கடலையில் தண்டு அழுகல் நோய் பற்றி தெரியுமா?



தற்போது கோடையில் பயிரிடப் பட்டுள்ள நிலக்கடலை பயிரில் தண்டு அழுகல்நோய் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இது எதனால் என்ன என்ன அறிகுறி உடன் வருகிறது என்பதையும், தடுப்பதற்கான மேலாண்மை உத்திகள் குறித்து விரிவாக பார்ப்போம்.

இந்த நோய் விதை மற்றும் மண் மூலமாக பரவும் முக்கிய மான பூஞ்சான நோய். இது ஸ்கிளிரோசியம்' (SCLEROTIUM ROLFSIC) என்ற பூஞ்சானத்தால் உண்டாகிறது. வேர்பகுதியை அழுகச் செய்து 80% வரை மகசூல் இழுப்பை உண்டாக்கிறது.

## அறிகுறி

நோய் பாதித்த இளம் செடிகளில் முதலில் முதல் இலையின் மேற்பரப்பில் வட்ட வடிவமான பழுப்பு நிற புள்ளிகள் தோன்றும். பின்னர் தண்டுப்பகுதியில் புழுப்பு நிற புள்ளிகள் உருவான இளம் செடிகள் சுருங்கி வளர்ச்சி தடைபடும். தொடர்ந்து பாதிப்பு அதிகரிக்கும் போது தண்டுப்பகுதி காய்ந்து செடிகள் முழுமை யாக கருகி விடும். நோய் பாதித்த செடிகளின் மட்கிய பாகங்கள் மூலமாக பூஞ்சானம் பரவி நோய் தீவிரமடைய செய்கிறது.

## தடுப்பு முறைகள்?

1) நல்ல தரமான சான்று பெற்ற, நோயற்ற விதை கடலை பருப்பை தேர்வு செய்து விதைக்க வேண்டும்.

2) விதைகளை அதிக ஆழத்தில் விதைக்காமல் நிலத்தின் மேற்பரப்பில் (2-3 செ.மீ) ஆழத்தில் விதைநேர்த்தி செய்யப்பட்ட விதைகளை விதைக்க வேண்டும்.

3) இந்த நோய் அதிகமாக உள்ள பகுதியில் நிலக்கடலை விதைப்புக்கு முன் 100 கிலோ தொழு உரத்துடன் 2 கிலோ டிரைக்கோடெர்மா விரிடி (எதிரி உதிரி) கலந்து இடவும்.

**விதைநேர்த்தி எப்படி செய்வது?**

விதைப்பதற்கு முன்பு ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டி.விரிடி/2 கிராம் டெபூகோனேசோல் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து விதைக்கலாம்.

**நோய் தோன்றிய பின்பு கட்டுப்படுத்துவது எப்படி?**

பாதிக்கப்பட்ட செடிகள் உள்ள நிலத்தில் ஏக்கருக்கு 500 கிராம் காப்பர் சல்பேட்/காப்பர் ஹைட்ராக்ஸைடு மணலும் கலந்து தூவி விட வேண்டும். அல்லது மான்கோசெப் + கார்பன்டாசியம் 3 கிராம்/லிட்டர் கலந்து வேர்பகுதி, தண்டு பகுதியில் நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# கருங்கல்பாளையம் சந்தையில் மாடுகள் விற்பனை சரிவு!



ஈரோடு, மார்ச் 27

ஈரோடு மாட்டுச் சந்தைக்கு கேரள வியாபாரிகள் வராததால், மாடுகள் வரத்து குறைந்ததோடு, விற்பனையிலும் கடும் சரிவு ஏற்பட்டு உள்ளது.

ஈரோடு கருங்கல்பாளையத்தில் வாரந்தோறும் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் மாட்டு சந்தைகள் நடைபெற்று வருகின்றன. இங்கு புதன்கிழமை அடிமாடுகளுக்கான சந்தையும், வியாழக் கிழமை பசுக்கள், எருமை மாடுகள், வளர்ப்பு கன்று களுக்கான சந்தையும் நடைபெற்று வருகின்றன.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

இங்கு கேரளா, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் கோவா போன்ற வெளிமாநிலங்களில் இருந்து வியாபாரிகள் வந்து மாடுகளை வாங்கி செல்வது வழக்கம்.

ஒரு வெளி மாநில வியாபாரி குறைந்தது 10 மாடுகள் வரை வாங்கி செல்வார். இதன் மூலமாக ரூ.5 முதல் 10 லட்சம் வரை வியாபாரம் நடைபெறும்.

இவ்வாறு பல வியாபாரிகளால் மாட்டுச்சந்தை நாளான்று கோடி கணக்கில் வர்த்தகம் நடைபெறும். இந்நிலையில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக ரூ.50 ஆயிரத்துக்கு மேல் பணம் எடுத்து தடை உள்ளதால் அண்டை மாநிலங்களிலிருந்து கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தைக்கு வரும் வியாபாரிகள் எண்ணிக்கை முற்றிலும் தடைப்பட்டிருக்கிறது.

இது குறித்து மாட்டுச்சந்தை நிர்வாகிகள் கூறியதாவது : மாட்டுச் சந்தைக்கு ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, கேரளாவில் இருந்து அதிகளவில் வியாபாரிகள் வருவார்கள். அவர்கள் குறைந்தபட்சம் 100 முதல் 120 மாடுகளை வாங்கிச் செல்வார்கள். இந்நிலையில், தேர்தல் பறக்கும் படையின் தீவிர சோதனையால், அம்மாநில வியாபாரிகள் வருவது முற்றிலும் தடைப்பட்டுள்ளது.

அதேபோன்று, உள்மாவட்டங்களிலும் தேர்தல் அதிகாரிகளின் கெடுபிடிகளால் குறைந்தளவிலான விவசாயிகளே தங்களது மாடுகளை கொண்டு வந்துள்ளனர். அதாவது, சந்தைக்கு 600 முதல் 750 மாடுகள் வரை கொண்டு வரப்படும்.

ஆனால், நேற்று முன்தின சந்தைக்கு 500க்கும் குறைவான மாடுகளே விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. ஆனால், அம் மாடுகளை வாங்குவதற்கே போதிய வியாபாரிகள் வரவில்லை. இவ்வாறு அவர்கள் கூறினர்.



# அறுவடைக்குப் பின் தரமான விதை சேமிப்பு – ஒரு பார்வை

விதை சேமிப்பு என்பது விதை அறுவடை செய்த காலம் முதல் அடுத்த பருவத்திற்கு நடவு செய்யும் காலம் வரை அதிகபட்ச முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் வீரியம் ஆகியவற்றை பராமரித்தலே விதை சேமிப்பின் முக்கிய நோக்கமாகும்.

விதை உற்பத்தியில் எவ்வளவு கவனம் செலுத்துகின்றோமோ




அந்த அளவிற்கு விதைகளை பூச்சி மற்றும் நோய்களி லிருந்து பாதுகாப்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் அறுவடைப் பணி முடிவுற்ற நிலையில் விதைகளை அதன் விதைப்பு பருவம் வரை தங்களது இடங்களில் சேமித்து வைக்கப்படுகிறது. இவ்வாறு சேமித்து வைக்கப்படும் விதைகளில் ஈரப்பதம் 13 சதவீதத்திற்கு மேல் இருந்தால் அவைகள் எளிதில் பூச்சி நோய் தாக்குதலுக்கு உட்படுகின்றது. இதனால் விதைகளின் தரம் பெரிதும் பாதிக்கப் படுகின்றது.

### விதைகளை பாதுகாக்கும் முறைகள்

விதைகளை சேமிக்க புதிய கோணிப்பைகள் அல்லது சுத்த மான தீவன சாக்குகளை பயன்படுத்த அறிவுறுத்தப்படுகின்றது. விதை சேமிக்கும் குதிர்கள் மற்றும் கிடங்குகளை சுத்தமாக பராமரித்தல் வேண்டும். குப்பைகள், தூசிகள், பூச்சி தாக்கப்பட்ட விதைகளை உடனுக்குடன் அகற்ற வேண்டும்.

ஈரப்பதத்தை அந்தந்த விதைகளின் தன்மைக்கு தகுந்தாற் போன்று 9 முதல் 13 சதவீத்த்திற்குள் இருக்குமாறு நன்கு காயவைத்து விதைகளை நொச்சி அல்லது வசம்பு கிழங்குகளை 1 கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் கலந்து சேமிக்க வேண்டும். வேதியியல் முறையில் 1 கிலோ விதைக்கு 3 கிராம் என்ற அளவில் கால்சியம் குளோரைடு, கால்சியம் கார்பனேட் மற்றும் அரப்பு தூள் 5:4:1 என்ற விகிதத்தில் கலந்த கலவை யினை பயன்படுத்தி விதையினை சேமித்து வைக்க வேண்டும். விதை மூட்டைகளை சீரான காற்றோற்றத்துடன் தரையில் அடுக் காமல் கட்டைகளின் மேல் அடுக்க வேண்டும். சுவற்றிலிருந்து 1 அடி இடைவெளி விட்டும் ஒரு அட்டியிலிருந்து மற்றொரு அட்டிக்கு 6 அடி இடைவெளி விட்டும் அடுக்க வேண்டும்.

ஒரு அட்டியில் மூட்டைகளை ஒன்றின் மேல் ஒன்று அடுக்கி வைக்கும் போது 6 மூட்டைகளுக்கு மிகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். 15 நாட்களுக்கொருமுறை மூட்டைகளில் பூச்சி தாக்குதல் உள்ளதா என கண்காணிக்க வேண்டும். மேற்குறிப் பிட்ட யுத்திகளை கையாண்டு தரமான விதைகளை சேமிப்புக் கால இழப்பு இல்லாமல் சேமித்து வைத்து பயன்பெற வேண்டும் என இராமநாதபுரம் மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பொ.இரத்தினகுமார் தெரிவித்துள்ளார்.

# அறுவடைக்குப் பின் விதையின் தரம் பேணுவது எப்படி?

சேலம், மார்ச் 27

சேலம் மாவட்ட விவசாயிகள் தற்போது நெல் மற்றும் நிலக்கடலை ஆகிய பயிர்களை அறுவடை செய்து, பின்நேர்த்தி செய்து அடுத்த பருவத்திற்கு பயிர் செய்யத் தேவையான விதையினை சேமித்து வைத்திருப்பார்கள். அவ்வாறு சேமித்து வைக்கப்படும் விதை போதிய அளவு இனத்தூய்மை (பிற இரகக்கலப்பு), புறத்துய்மை, முளைப்புத்திறன் மற்றும் ஈரப்பதம் கொண்டிருப்பது மிகவும் அவசியமானதாகும். மேலும் நிலக்கடலையில் பொக்கு விதைகள், உடைந்த விதைகள் இல்லாமல் சுத்தம் செய்து வைக்க வேண்டும்.

ஒவ்வொரு பயிருக்கும் குறிப்பிட்ட குறைந்தபட்ச அளவு புறத்தூய்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம், பிற இரகக்கலப்பு ஆகியவை வரையறுக்கப்பட்டுள்ளது. நெல் விதையாக இருப்பின் புறத்தூய்மை 98%க்கு குறையாமலும், முளைப்புத் திறன் 80%க்கு குறையாமலும், ஈரப்பதம் 13%க்கு மிகாமலும், பிற இரகக்கலப்பு 0.20%க்கு மிகாமலும் இருத்தல் அவசிய மாகும். நிலக்கடலையில் புறத்தூய்மை 96%க்கு குறையா மலும், பொக்கு காய்கள் 4%க்கு மிகாமலும், முளைப்புத்திறன் 70%க்கு குறையாமலும் இருத்தல் அவசியமாகும்.

மேற்சொன்ன விதைத் தரத்தினை தாங்கள் சேமித்து வைத்திருக்கும் நெல் மற்றும் நிலக்கடலை பயிர் விதைகள் கொண்டுள்ளதா? என்பதை அறிந்து கொள்ள சேலம் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் விரும்பினால் தாங்கள் சேமித்து வைத்திருக்கும் விதையிலிருந்து நெல் விதையாக இருப்பின் 100 கிராம் விதையினை துணிப்பையிலும், 50 கிராம் விதை யினை பாலிதீன் பையிலும் தனித்தனியாக எடுக்க வேண்டும். நிலக்கடலை எனில் 1 கிலோ விதையினை துணிப்பையிலும், 50 கிராம் விதையினை பாலிதீன் பையிலும் தனித்தனியாக எடுத்து, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், அறை எண் 403-ல் இயங்கி வரும் சேலம் மாவட்ட விதைப்பரிசோதனை நிலையத்தில், நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி தெரிந்து கொள்ளலாம். ஒரு விதை மாதிரிக்கு பரிசோதனை கட்டணம் ரூ.80/- மட்டுமே ஆகும்.

# உரக்கடைகளில் தடை செய்யப்பட்ட எலி மருந்து கடும் நடவடிக்கை என அதிகாரிகள் எச்சரிக்கை

வேலூர், மார்ச் 27

வேலூர் மாவட்டத்தில் உள்ள உரக்கடைகளில் தடை செய்யப்பட்ட எலி மருந்து விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

வேலூர் மாவட்டத்தில் உள்ள உரக்கடைகளில் தடை செய்யப் பட்ட எலி மருந்து விற்பனை குறித்து ஆய்வு செய்ய மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ஸ்டீபன் அறிவுறுத்தினார். அதன்பேரில், உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) ராகினி தலைமையிலான வேளாண் அதிகாரிகள் மாவட்டத்தில் உள்ள உரக்கடைகளில் தடை செய்யப்பட்ட எலி மருந்து குறித்து ஆய்வு செய்தனர்.

இது குறித்து வேளாண் அதிகாரிகள் கூறியதாவது, மாவட்டத்தில் உள்ள உரக்கடைகளில் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மருந்துகள் கொள்முதல் செயல் பட்டுள்ளதா, தடை செய்யப்பட்ட மருந்துகள் இருப்பு உள்ளதா, தடை செய்யப்பட்ட 3 சதவீதம் வெள்ளை அல்லது மஞ்சள் பாஸ்பரஸ் கொண்ட எலி மருந்து விற்பனை செய்யப்படுகிறதா என ஆய்வு செய்யப்பட்டது.

வயலில் பயிர்களை தாக்கும் பூச்சி, நோய், களைகள் மற்றும் எலிகளை கட்டுப்படுத்த பயிர் பாதுகாப்பு மருந்துகள் பூச்சிக் கொல்லி மருந்துகள் சட்டம் 1968ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு விதிமுறைகள்படி உற்பத்தி செய்யப்பட்டு, உரிமம் பெற்று விற்பனை செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் எலிகளை கொல்லும் 3 சதவீதம் வெள்ளை அல்லது மஞ்சள் பாஸ்பரஸ் கொண்ட ரேடால் பேஸ்ட் என்ற எலி மருந்து உற்பத்தி மற்றும் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் இந்த மருந்தை பயன்படுத்த வேண்டாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

ஆன்லைன் வர்த்தகம் மூலமாக விற்பனை செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. பூச்சிக்கொல்லி மருந்துகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் ரேடால் பேஸ்ட் என்ற மருந்தை உற்பத்தி செய்ய தடை செய்யப்பட்டுள்ளது.

பூச்சிக்கொல்லி மருந்துகளை விற்பனை செய்யும் மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் இந்த மருந்தை விற்பனை செய்யக்கூடாது. தடை செய்யப்பட்ட மருந்துகள் இருப்பு கண்டறியப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.



# அவகாடோவின் ஆரோக்கிய நன்மைகள் - முழுமையான வழிகாட்டி



இப்போது உலகம் முழுவதும் மிகவும் பிரபலமாகி வரும் பழங்களில் ஒன்றாகும் அவகாடோ (வெண்ணெய் பழம்). இதன் மென்மையான அமைப்பு, சுவை மட்டுமல்லாமல், ஆரோக்கியத்திற்கு அளிக்கும் நன்மைகளாலும் இது "சூப்பர் உணவு" என்று அழைக்கப்படுகிறது.

**தமிழ்நாட்டில் அவகாடோ – ஒரு உண்மை**

ஆச்சரியமாக, அவகாடோ தமிழ்நாட்டின் சில மலைப் பகுதிகளில் (நீலகிரி, கொடைக்கானல் போன்ற இடங்களில்) நன்றாக விளைகிறது.

**ஆனால் :**

- இது பெரும்பாலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது
- அதன் ஆரோக்கிய நன்மைகள் பற்றி தெரியாததால், நாமே அதிகமாக பயன்படுத்துவதில்லை
- உள்ளூரில் கிடைத்தாலும், மக்கள் அதை தவிர்த்து விடுகிறார்கள்
- அதனால், நமக்கு அருகில் கிடைக்கும் இந்த சத்தான பழத்தை நாமே பயன்படுத்த ஆரம்பிக்க வேண்டிய நேரம் இது!

**1. இதய ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது**

அவகாடோவில் "நல்ல கொழுப்பு" (Healthy fats) அதிகமாக உள்ளது. குறிப்பாக ஒற்றை அசெறிவூட்டப்பட்ட கொழுப்புகள் (Monounsaturated fats) இதயத்திற்கு மிகவும் நல்லது.

**இது :**

- கெட்ட கொழுப்பை (LDL) குறைக்கும்

● நல்ல கொழுப்பை (HDL) அதிகரிக்கும்

இதனால் இதய நோய் அபாயம் குறைகிறது.

**2. உடல் எடையை கட்டுப்படுத்த உதவும்**

அவகாடோ சாப்பிட்டால் உடனே பசி குறையும். இதில் உள்ள நார்ச்சத்து (fiber) நீண்ட நேரம் நிறைவுணர்வை தருகிறது.

**இதனால் :**

● அதிகமாக சாப்பிடுவது குறையும்

● உடல் எடை கட்டுப்பாட்டில் இருக்கும்

**3. தோல் மற்றும் முடி ஆரோக்கியம்**

அவகாடோவில் விட்டமின் சி ஆண்டிஆக்ஸிடென்ட்கள் அதிகம் உள்ளது.

**இது :**

● தோலை மென்மையாக்கும்

● வயது முதிர்ச்சி அறிகுறிகளை தாமதமாக்கும்

● முடி வளர்ச்சியை மேம்படுத்தும்

**4. செரிமானத்தை மேம்படுத்துகிறது**

அவகாடோவில் உள்ள நார்ச்சத்து செரிமானத்தை சீராக்க உதவுகிறது.

**இது :**

● மலச்சிக்கலை தடுக்கும்

● குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



**5. கண் பார்வைக்கு நல்லது**

இதில் Lutein மற்றும் Zeaxanthin போன்ற முக்கிய ஊட்டச் சத்துக்கள் உள்ளன.

**இவை :**

- கண் பார்வையை பாதுகாக்கும்
- வயதுடன் வரும் கண் பிரச்சனைகளை குறைக்கும்

**6. சர்க்கரை நோயாளிகளுக்கு உதவும்**

அவகாடோவில் சர்க்கரை அளவு குறைவாக உள்ளது.

**அதே சமயம் :**

- ரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்த உதவும்
- இன்சுலின் சென்சிடிவிட்டியை மேம்படுத்தும்

**7. மூளை செயல்பாட்டை மேம்படுத்தும்**

**இதில் உள்ள நல்ல கொழுப்புகள் மற்றும் வைட்டமின்கள் :**

- நினைவாற்றலை மேம்படுத்தும்
- மூளை ஆரோக்கியத்தை பாதுகாக்கும்

**அவகாடோவை எப்படி சாப்பிடலாம்?**

- ஸ்மூத்தி (Smoothie) ஆக
- சாலட் (Salad) ஆக
- டோஸ்ட் மீது பரப்பி
- குவாகமோலி (Guacamole) செய்து

**முடிவுரை**

அவகாடோ ஒரு சுவையானதும், ஊட்டச்சத்துகள் நிறைந்தது மான உணவாகும். இதை உங்கள் தினசரி உணவில் சேர்த் தால், இதய ஆரோக்கியம் முதல் தோல் அழகு வரை பல நன்மைகளை பெறலாம்.

தகவல் : **குளோரி.கே.எஸ், சி.பிரசாத், உதவி பேராசிரியர்கள் (மண்ணியல் துறை), கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பால் கறவைக்கு முன்னும் பின்னும் கடைப்பிடிக்க வேண்டிய பராமரிப்பு முறைகள்

கறவை மாடு வளர்ப்பில் அதிக இலாபம் கிடைக்க வேண்டுமென்றால் நல்ல தீவனம் மட்டும் போதாது. சரியான பால் கறக்கும் முறையும் மிகவும் முக்கியமானது. பல பண்ணைகளில் பால் உற்பத்தி குறைவதற்கும், மடி நோய் அதிகரிப்பதற்கும் காரணம் தவறானபால் கறக்கும் நடைமுறைகளே ஆகும். தினசரி பால் கறப்பதற்கு முன்னும் பால் கறந்த பிறகும் சில எளிய பராமரிப்பு நடைமுறைகளைப் பின்பற்றினால் பால் தரமும் உற்பத்தியும் கணிசமா கமேம்படும்.

**பால் கறவைக்;கு முன்பு செய்ய வேண்டியவை**

**1. மாட்டின் உடல் நிலையை பரிசோதித்தல் :** பால் கறக்கும் முன் மாட்டின் மடியையும் காம்புகளையும் கவனமாக பரிசோதிக்க வேண்டும். மடியில் வீக்கம் உள்ளதா,காம்பில் காயம் உள்ளதா, மாட்டிற்கு காய்ச்சல் அல்லது உடல் சோர்வு உள்ளதா என்பதை பார்த்து உறுதி செய்ய வேண்டும். இந்த ஆரம்ப பரிசோதனை மடி நோயை ஆரம்பத்திலேயே கண்டறிய உதவும். சிறிய மாற்றத்தைக் கூட அலட்சியப்படுத்தக் கூடாது.

**2. மடி மற்றும் காம்புகளை சுத்தம் செய்தல் :** பால் கறக்கும் முன் மடியை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கலந்த தண்ணீர் கொண்டு நன்கு கழுவ வேண்டும். அதன் பிறகு சுத்தமான, உலர்ந்த பருத்தித் துணியால் துடைக்க வேண்டும். ஒரே துணியை அனைத்து மாடுகளுக்கும் பயன்படுத்தக் கூடாது. அப்படி செய்தால் ஒரு மாடிலிருந்து மற்றொன்றுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது.

**3. முதல் பாலை சோதனை செய்தல் :** காம்பிலிருந்து வரும் முதல் 2–3 சொட்டு பாலை தனியாக ஒரு பாத்திரத்தில் கறந்து பால் நிறம் மாறியுள்ளதா, திரிதிரியாகவோ, இரத்தம் கலந்தோ, கட்டியாகவோ இருக்கிறதா என்று பாலின் தரத்தை பரிசோதிக்க வேண்டும். இது மடி நோயை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிய உதவும். இந்த எளிய நடைமுறை பால் உற்பத்தியை பாதுகாக்கும்.

**4. பால் கறக்கும் நேரத்தை நிரந்தரமாக வைத்தல் :** தினமும் காலை மற்றும் மாலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பால் கறவைக்கு மாடுகளை பழக்கி இருந்தால் அதே நேரத்தில் பால் கறப்பதன் மூலம் பால் உற்பத்தியை சீராக வைத்திருக்க உதவும். நேரம் மாறினால் பால் சுரப்பு குறையும்.

**5. பால் கறக்கும் போது கடைபிடிக்க வேண்டிய முறை :** பால் கறக்கும் போது காம்பை முழுமையாக கைப்பிடித்து கறக்க வேண்டும். காம்பை இழுத்து கறக்கக் கூடாது. பால் முழுமையாக கறக்கப்பட வேண்டும். மடியில் பால் மீதமிருந்தால் அடுத்த முறை பால் உற்பத்தி குறையும். அமைதியான சூழலில் பால் கறக்க வேண்டும். மாடுகளுக்கு பயம் ஏற்பட்டால் பால் சுரப்பு குறையும்.

**பால் கறவைக்கு பின்பு செய்ய வேண்டியவை**

**1. காம்பு பராமரிப்பு**

பால் கறந்த உடன் காம்புகளை கிருமி நாசினி (பொட்டாசியம் பெர்மாங்கனேட்) கலந்த நீர் அல்லது மடிக்காம்புகளுக்கென்று பிரத்தியேகமாக இருக்கும் கிருமி நாசினி திரவம் கொண்டு சுத்தம் செய்வது மடி நோய் வராமல் தடுக்க உதவும். பால் கறந்த உடன் மாடுகளைஉடனே படுக்க விடாமல் 20-30 நிமிடங்கள் நிற்கச் செய்ய வேண்டும். அதற்கு மாடுகளை ஒட்ட கட்டி வைத்து கலப்புத் தீவனம் போடுவதன் மூலம் மாடுகள் கீழே படுக்காமல் தீவனம் சாப்பிடுவதில் கவனம் செலுத்தும். அந்த நேரத்தில் காம்புத் துவாரங்கள் மூடப்பட்டு விடுவதால் அதன் மூலம் கிருமிகள் உள்ளே செல்லாது. மடி நோய் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

**2. பாலை பாதுகாப்பாக சேமித்தல்**

பால் கறந்த உடன் சுத்தமான வடிகட்டியில் வடிகட்டி, மூடிய பாத்திரத்தில் சேமிக்க வேண்டும். பால் பாத்திரங்கள் வெந்நீரில் கழுவி உலர்த்தப்பட்டிருக்க வேண்டும். பால் சேகரிக்கும் இடம் சுத்தமாகவும் ஈக்கள் இல்லாமலும் இருக்க வேண்டும். இது பால் தரத்தை உயர்த்தும்.

**மாடுகளை வளர்ப்போர் தவிர்க்க வேண்டிய பொதுவான தவறுகள்**

காம்புகளை சுத்தம் செய்யாமல் பால் கறப்பது, ஒரே துணியை பல மாடுகளுக்கு பயன்படுத்துவது, பாலை முழுமையாக கறக்காதது, பால் கறந்த பின் மடியை கழுவாமல் தவிர்ப்பது போன்ற தவறுகள் மடி நோய் மற்றும் பால் குறைவுக்கு காரணமாகின்றன. இத்தகைய தவறுகளைத் தவிர்ப்பது அவசியம்.

பால் கறக்கும் முன் மற்றும் பின் செய்ய வேண்டிய இந்த எளிய நடைமுறைகள், பால் உற்பத்தி அதிகரிக்கவும், மடி நோய் குறையவும், பால் தரம் மேம்படவும் உதவுகின்றன. தினசரி சிறிது நேரம் கூடுதல் கவனம் செலுத்துவது, ஆண்டு முழுவதும் அதிக வருமானத்தை உருவாக்கும்.

தகவல் ; **முனைவர் இரா.உமாராணி, பேராசிரியர், கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333